1987 ஏப்ரல் 8]

(ஆ) தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியத்தில் பணியாற்றுவோர், போனஸ் கோரி உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்திருந்தனர். தீரப் பரிசிலித்தபின், அந்த வாரியம் இலாபம் ஈட்டும் நிறுவனம் அல்ல என்றும், போனஸ் சட்டத்தின்படி, போனஸ் வழங்க வேண்டிய கட்டாயம் இல்லை என்றும், உயர்நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியமும், மேற்சொன்ன வாரியத்தைப் போன்று அதே நிலையில் உள்ளது. அது ஒரு பொதுமக்கள் பணிக்கான நிறுவனமாகும்.

50—வினா 10499—திரு. ஆர். செங்கசாமி: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மெட்ரோ வாட்டர் போர்டு தொழிலாளர்களுக்கு எல்.டி..சி. வழங்காதது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எல்.டி.சி. வழங்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இதுபற்றிய செயற்குறிப்பு ஆய்வில் இருந்து வருகிறது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(அ) அம்பாசமுத்திரம் சேரன்மாதேவி பகுதிகளில் பாசனக் கால்வாய்களைத் திறந்துவிட வேண்டியதன் அவசியம் குறித்து.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம் தாலுக்காவில் இருக்கின்ற கடமா நதியில் 5-வது, 6-வது கால்வாய் திறக்கப்படாமல் இருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. இதனால் விவசாயிகள் பெரிதும்

பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த அணையிலே போதிய அளவு தண்ணீர் இருக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. விவசாயிகளுடைய கோரிக்கையை கவனித்து திறக்காவிட்டால் காங்கேயன் கால்வாய் பகுதி, அம்பாசமுத்திரம், சேரன்மாதேவி பகுதியைச் சேர்ந்த 1,500 ஏக்கர் பயிர்கள் கருகிவிடுகின்ற அபாயம் இருக்கிறது. எனவே பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள், கருகிவிடுகின்ற அபாயகரமான நிலையில் இருக்கின்ற அந்தப் பயிரைக் காப்பதற்கு இன்றைக்கே நடவடிக்கை மேற்கொண்டு அந்தக் கால்வாய்த் தண்ணீரைத் திறப்பதற்கு பரிசிலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு கலந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) சின்னமனூர் வட்டம் கருங்காட்டடங்குளம் பகுதியில் வெற்றிலைக் கொடிக்கால்களுக்கு நீரின்மை.

திரு. வே. இரா. ஜெயராமன்: தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், சின்னமனூர் வட்டம், கருங்காட்டடங்குளம் . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவையெல்லாம் point of information, point of order அல்ல.

திரு. வே. இரா. ஜெயராமன்: தலைவர் அவர்களே, சுமார் 150 ஏக்கர் வெற்றிலை கொடிக்கால் நீரின்றி காய்ந்து போகும் நிலையில் உள்ளது. ஆகவே இந்தப் பயிரை பெரியாறு, சுருளி யாறு ஆகியவற்றினுடைய ஊற்று நீரைப் பயன்படுத்தி காப்பாற்ற அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு கலந்து விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) சீர்காழி சிதம்பரம் தாலுக்காக்களிலுள்ள நெற்பயிர்களுக்குத் தண்ணீர்விட வேண்டியதன் அவசியம் குறித்து.

திரு. க. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் சென்ற 28—3—1987 அன்று நான் கேட்டிருந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீது என்னுடைய சீர்காழி தாலுக்கா, தென்னாற்காடு